




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்






| Vol: 04 | Issue: 007 | 4 Pages | 07.08.2026 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 04 | இதழ்: 007 | 4 பக்கங்கள் | 07.08.2026 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**சுவைஒளி ஊறுஓசை நாற்றமென ஐந்தின்**
**வகைதெரிவான் கட்டே உலகு**

**விளக்கம்: சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று சொல்லப்படும் ஐந்தன் வகைகளையும் ஆராய்ந்து அறிய வல்லவனுடைய அறிவில் உள்ளது உலகம்.**

# ‘முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை தமிழக அரசு உயர்த்தினால் சுப்ரீம் கோர்ட்டுக்கு செல்வோம்’ கேரளா எச்சரிக்கை



திருவனந்தபுரம், ஆக. 7

முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்பு தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டு பிறப்பித்த முக்கிய உத்தரவுகள் இன்னும் செயல்படுத்தப்படவில்லை என்று கேரள நீர்வளத்துறை மந்திரி மான்ஸ் ஜோசப் குற்றம்சாட்டியுள்ளார். மேலும், அணையின் நீர்மட்டத்தை 142 அடிக்கு மேல் உயர்த்த தமிழக அரசு திட்டமிட்டுள்ள நிலையில், அத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால், கேரள அரசு சுப்ரீம் கோர்ட்டை நாடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

கேரளாவின் இடுக்கி மாவட்டத்தில் உள்ள 131 ஆண்டுகள் பழமையான முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள இருப்பதாக தமிழக அரசு தனது பட்ஜெட்டில் நேற்று அறிவித்தது. இதற்கு கேரள மாநிலத்தின் தரப்பில் இருந்து எதிர்ப்புகள் வரத் தொடங்கியுள்ளன. இது குறித்து கேரள அரசின் நீர்வளத்துறை மந்திரி மான்ஸ் ஜோசப் செய்தியாளர்களிடம் கூறியதாவது;

“முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை எந்த சூழலிலும் 142 அடிக்கு மேல் உயர்த்தக்கூடாது என்ற நிலைப்பாட்டில் கேரள அரசு உறுதியாக உள்ளது. அணையின் நீர்மட்டத்தை 142 அடிக்கு மேல் உயர்த்த கேரளா ஒருபோதும் அனுமதிக்காது. முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்புகுறித்தமிகுந்தகவலைக்குரியகாலகட்டத்தில்நாம்இருக்கிறோம். சுப்ரீம் கோர்ட்டு உத்தரவின்படி தேசிய அணைப் பாதுகாப்பு ஆணையம் முல்லைப் பெரியாறு அணையில் விரிவான பாதுகாப்பு ஆய்வை மேற்கொள்ள வேண்டும். அந்த ஆய்வு டிசம்பர் 31ந்தேதிக்கு முன்பே நடந்திருக்கவேண்டும். இருப்பினும், இதுவரைஒருஅடிப்படைபாதுகாப்பு தணிக்கை கூட நடத்தப்படவில்லை.

சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்ட பாதுகாப்பு ஆய்வு மற்றும் பலப்படுத்தும் நடவடிக்கைகள்கூட இன்னும் முழுமையடையாத நிலையில், தமிழக அரசு முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்துவது தொடர்பான அறிவிப்பை வெளியிட்டிருப்பது மிகவும் துரதிர்ஷ்டவசமானது.

இரு மாநிலங்களுக்கும் ஏற்புடைய நிலைப்பாடுகளை சுப்ரீம் கோர்ட்டு பரிசீலித்து, இந்த பிரச்சினைக்குதீர்வு காணவேண்டும் என்பதே கேரளாவின் நிலைப்பாடு. தமிழக அரசு முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்த முயற்சித்தால், கேரளா சுப்ரீம் கோர்ட்டை நாடும். கேரளாவின் நலன்களை மாநில அரசு உறுதியாகப் பாதுகாக்கும்.

முல்லைப் பெரியாறில் புதிய அணையைக் கட்டுவதே எங்களின் அடிப்படைத் கோரிக்கையாக தொடர்ந்து வருகிறது. கேரள மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் அதே வேளையில், தமிழ்நாட்டிற்குத் தேவையான நீர் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், பரஸ்பர உடன்பாட்டின் மூலம் இப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். அதுவே மாநிலத்தின் நிலையான நிலைப்பாடாகும்.

தமிழ்நாடுகேரளா இடையிலான உறவில், கடந்த 10 ஆண்டுகளில் எதுவும் நடக்கவில்லை. அந்த காலகட்டத்தில் ஏதேனும் முக்கிய முடிவு கூட எடுக்கப்படவில்லை. உறவுகள்இருந்திருக்கலாம், ஆனால்நடைமுறையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை”

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# ‘சிறைபிடிக்கப்பட்ட இந்திய மீனவர்களை விரைவாக விடுவிக்க வேண்டும்’ இலங்கை அரசிடம் விக்ரம் மிஸ்ரி வலியுறுத்தல்



கொழும்பு, ஆக. 7

இந்திய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் விக்ரம் மிஸ்ரி, அரசு முறை சுற்றுப்பயணமாக இலங்கை சென்றுள்ளார். மத்திய அரசின் வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளராக இலங்கைக்கு அவர் மேற்கொளளும் முதல் சுற்றுப்பயணம் இதுவாகும். இலங்கை சென்ற அவர், அந்நாட்டின் ஜனாதிபதி அனுரகுமார திசநாயகே, பிரதமர் ஹரினி அமரசூரியா, வெளியுறவுத்துறை மந்திரி விஜித ஹேரத் மற்றும் வெளியுறவுத்துறை செயலாளர் அருணி ரணராஜா ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

இந்த பேச்சுவார்த்தைகளின்போது, மீனவர்கள் விவகாரம் குறித்து எடுத்துரைத்தவிக்ரம்மிஸ்ரி, இலங்கைகடற்படையால்சிறைபிடிக்கப்பட்ட இந்திய மீனவர்களை விரைவாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை அரசிடம் வலியுறுத்தினார் என மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும், பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இருதரப்பிலும் அரசு அமைப்புகள் தொடர்ந்து செயல்பட்டு வரும் அதே வேளையில், மீனவர்களின் வாழ்வாதாரத் தேவைகளை கருத்தில் கொண்ட மனிதாபிமான அணுகுமுறையே நமது செயல்பாடுகளுக்கு தொடர்ந்து வழிகாட்ட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்தியா மற்றும் இலங்கை இடையிலான உறவுகளில் மீனவர் விவகாரம் ஒரு சர்ச்சைக்குரிய பிரச்சினையாக இருந்து வருகிறது. இலங்கை கடல் எல்லைக்குள் சட்டவிரோதமாக நுழைந்ததாகக் கூறப்படும் பல சம்பவங்களில், இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்வதும், அவர்களின் படகுகளைக் கைப்பற்றியதுமான சம்பவங்கள் தொடர்ந்து அரங்கேறி வருகின்றன.

அதிகாரப்பூர்வத் தரவுகளின்படி, இந்த ஆண்டு ஏப்ரல் 15ந்தேதி வரை, சட்டவிரோதமாக எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி 18 விசைப்படகுகள் இலங்கை கடற்படையால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மேலும் 128 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தொலைநோக்கு பார்வையுடன் கூடிய வேளாண் பட்ஜெட்: முதல்அமைச்சர் விஜய்



சென்னை, ஆக. 7

அனைவரும்பாராட்டும்வகையில் திருத்திய நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்த நிதித்துறை அமைச்சர் மரிய வில்சன், வேளாண்மை நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்த வேளாண்மை, உழவர் நலத்துறை அமைச்சர்வினோத்ஆகியோருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள் மற்றும் பாராட்டுகள் என முதல் அமைச்சர் விஜய் கூறியுள்ளார்.

202627ஆம் நிதியாண்டுக்கான தமிழக வேளாண் பட்ஜெட், பேரவையில் இன்று தாக்கல் செய்யப்பட்டது. வேளாண் அமைச்சர்வினோத்தாக்கல்செய்த பட்ஜெட்டில்பல்வேறு அறிவிப்புகள் இடம்பெற்றுள் ளன.

வேளாண் நிதி அறிக்கையை தாக்கல்செய்தவேளாண்அமைச்சர் வினோத் சுமார் இரண்டு மணி நேரம் உரையாற்றினார். காலை 9.31 மணிக்கு பட்ஜெட் உரையை வாசிக்கத் தொடங்கிய அமைச்சர் வினோத் 11.38க்கு உரையை நிறைவு செய்தார்.

இந்தநிலையில், முதல்அமைச்சர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாட்டின் வளர்ச்சியை இலக்காகவும், மக்கள் நலனை மையமாகவும் கொண்டு, ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்றே மாதங்களில் அனைவரும் பாராட்டும் வகையில் 2026 27ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்துள்ள நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை அமைச்சர் மரிய வில்சன் வேளாண்மை நிதிநிலை அறிக்கையைத்தாக்கல்செய்துள்ள வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் வினோத் அவர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகள் மற்றும் பாராட்டுகள்.

தொலைநோக்குப் பார்வையுடன்கூடிய திருத்திய நிதிநிலை அறிக்கையானது மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள், திருநர்கள், தொழிலாளர்கள், மீனவர்கள், நெசவாளர்கள், தொழில்முனைவோர், அரசுப் பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பு மக்களின் முன்னேற்றத்திற்கும் புதிய நம்பிக்கையை அளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

வேளாண்மை நிதிநிலை அறிக்கையானது, தமிழ்நாட்டின் வேளாண் வளர்ச்சியோடு, அதன் தொழில்சார்ந்த கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு, பால்வளம், உணவுப் பொருட்களைப் பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக் கூட்டுதல் போன்ற தொழில்களையும் மேம்படுத்துவதோடு, அனைத்துத் தரப்பு விவசாயிகளின் நலனையும் வாழ்வாதாரத்தையும் மேலும் வலுப்படுத்தும் வகையில் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 8 ராமேஸ்வரம் மீனவர்கள் கைது; வெளியுறவுச் செயலர் இலங்கை அரசிடம் பேசமாட்டாரா? மாணிக்கம் தாகூர்



சென்னை, ஆக. 7

மோடி அரசுக்குத், தமிழ்நாட்டு மக்களின் நலன் மீதும் மீனவர்களின் வாழ்வாதாரம் மீதும் துளியளவும் அக்கறையில்லை என மாணிக்கம் தாகூர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

8 ராமேஸ்வரம் மீனவர்கள் கைது! படகுகளும் பறிமுதல்!.. இந்திய வெளியுறவுச் செயலர் விக்ரம் மிஸ்ரி கொழும்புவில் இருக்கும்போதே இந்த அத்துமீறல் நடந்துள்ளது. பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை மீட்பது குறித்து வெளியுறவுச் செயலர் விக்ரம் மிஸ்ரி இலங்கை அரசிடம் பேசமாட்டாரா? 2023 முதல் இதுவரை 1,306 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், 179 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் மாநிலங்களவையிலேயே பிரவீன் சக்ரவர்த்தியின் கேள்விக்கு பதிலளித்த ஒப்புக்கொண்டுவிட்டுப் பொறுப்பிலிருந்து நழுவும் மோடி அரசுக்குத், தமிழ்நாட்டு மக்களின் நலன் மீதும் மீனவர்களின் வாழ்வாதாரம் மீதும் துளியளவும் அக்கறையில்லை என்பது மீண்டும் வெளிச்சத்திற்கு வந்துள்ளது!

இலங்கையின் இந்தத் தொடர் அத்துமீறலுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும், சிறைபிடிக்கப்பட்டஅனைவரையும்அவர்களின் படகுகளுடன் உடனடியாக விடுவிக்க வலியுறுத்தியும் பாராளுமன்றத்தில் இன்று (06.08.2026) கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்துள்ளேன்!

இவ்வாறு அதில் தெரிவிக்கபட்டுள்ளது.

# சென்னை தலைமைச் செயலக வளாகத்தில் உதயநிதி காரில் மீண்டும் ஏற முயன்ற எடப்பாடி பழனிசாமி



சட்டசபைகூட்டம்நடந்துகொண்டிருப்பதால் சட்டசபைக்கு வெளியே தலைமைச் செயலக வளாகத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் காரும் அதற்கு முன்னால் அதிமுக பொது செயலாளர் எடப்பாடி பழனிச்சாமிகாரும்நிறுத்திவைக்கப்பட்டிருந்தது சட்டசபை கூட்டம் முடிவடைந்த போது இருவரும் நிருபர்களுக்கு தனித்தனியாக பேட்டி அளித்தனர். அதன்பிறகு அவரவர்அலுவலகத்துக்கு சென்று எம்எல்ஏக்களுடன் ஆலோசித்தனர். அப்போது எடப்பாடி பழனிசாமி வீட்டுக்கு செல்வதற்காக கார் நிற்கும் இடத்திற்கு வந்தார்.

அந்த இடத்தில் உதயநிதி ஸ்டாலின் கார் நின்று கொண்டிருப்பதை அறியாத அவர் கார் மாறி அதில் ஏற முயன்றார். உடனே பாதுகாவலர்கள் நமது கார் முன்னால் நிற்கிறது இந்த கார் இல்லை என்று தெரிவித்தனர்

உடனே சுதாரித்து கொண்ட எடப்பாடி பழனிசாமி அதன்பிறகு தனது காரில் ஏறி வீட்டுக்கு புறப்பட்டார். ஏற்கனவே திமுக ஆட்சியின் போதும் இதே போல் உதயநிதி ஸ்டாலின் காரில் அப்போது எடப்பாடி பழனிசாமி ஏற முயன்றது குறிப்பிடத்தக்கது.

# ஏனங்குடி அரசு பள்ளி பசுமைத் தோட்டத்தில் தோட்டக்கலை துணை இயக்குனர் ஆய்வு



நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் ஏனங்குடி அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் தோட்டக்கலைத்துறை சார்பாக "பசுமைத் தோட்டம்" அமைக்கப்பட்டுள்ளது. இந்த பசுமை தோட்டத்தினை தோட்டக்கலைத் துணை இயக்குநர் (பொ) திலீப், தோட்டக்கலை உதவி இயக்குநர் முஹம்மது சாதிக் ஆகியோர் நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர். ஆய்வின்போது தோட்டத்தில் விளையக்கூடிய காய்கறிகள் மற்றும் கீரைகள் வகைகளை பள்ளியில் சத்துணவுக்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினர். இந்த ஆய்வின் போது பள்ளியின் தலைமை ஆசிரியர் குமார், வட்டார துணை தோட்டக்கலை அலுவலர் செல்ல பாண்டியன் மற்றும் ஆசிரியர்கள் உடன் இருந்தனர்.



மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., அவர்கள் இன்று (06.08.2026) மதுரை மாவட்டம், டி.ஆர்.ஒ காலனியில் ரூபாய் 5.19 கோடி மதிப்பீட்டில் 200 மகளிர் தங்கும் வகையில் புதிதாக கட்டப்பட்டுள்ள தோழி பணிபுரியும் மகளிர் விடுதியை ஆய்வு செய்து பார்வையிட்டார். இவ்விடுதிகளில் பயோமெட்ரிக் உள்நுழைவு, 24X7 பாதுகாப்பு வசதி, WiFi வசதி, சிசிடிவி வசதி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், ஆரோக்கியமான உணவு, பகல் நேர குழந்தைகள் பராமரிப்பு வசதி, சுடுநீர் வசதி, சலவை இயந்திரம், இஸ்திரி வசதி, வாகன நிறுத்துமிடம் மற்றும் பொழுதுபோக்கு அறை போன்ற வசதிகள், குறைந்த வாடகையில் வழங்கப்படுகின்றன.

# தமிழக அரசியலில் பரபரப்பு; அமைச்சர் ஆனந்த் உடன் சி.வி. சண்முகம், வேலுமணி சந்திப்பு

சென்னை, ஆக. 7



தமிழக அமைச்சர் ஆனந்த் உடன், அ.தி.மு.க. அதிருப்தி எம்.எல்.ஏ.க்கள் சி.வி. சண்முகம், எஸ்.பி. வேலுமணி இன்று சந்தித்து பேசியது பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது.

தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்த த.வெ.க. ஆட்சியமைத்தது. அக்கட்சியின் தலைவர் விஜய் முதல்அமைச்சகராக கடந்த மே மாதம் 10ந்தேதி பொறுப்பேற்று கொண்டார். இதனை தொடர்ந்து பெரும்பான்மையை நிரூபிக்க அவையில், நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அப்போது, தேர்தலில் 47 இடங்களை வென்றிருந்த அ.தி.மு.க.வில், பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் ஓர் அணியும், முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி. வேலுமணி, சி.வி.சண்முகம் தலைமையில் மற்றோர் அணியும் என 2 ஆக பிரிந்து செயல்பட்டது.

சட்டசபையில் த.வெ.க. ஆட்சி அமைக்க பெரும்பான்மையை நிரூபிக்க நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் எஸ்.பி.வேலுமணி, சி.வி.சண்முகம் தரப்பு அணியில் 25 எம்.எல்.ஏ.க்கள் ஆதரவு தெரிவித்தனர். எதிர்ப்பு தெரிவித்து எடப்பாடி பழனிசாமி தரப்பு அணியில் 22 எம்.எல்.ஏ.க்கள் வாக்கெடுப்பில் பங்கேற்றனர்.

த.வெ.க.வுக்கு ஆதரவு தெரிவித்த அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களின் கட்சி பதவியை பறித்து எடப்பாடி பழனிசாமி நடவடிக்கை எடுத்தார். மேலும் கட்சி கொறடா உத்தரவை மீறி செயல்பட்டதாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் சபாநாயகரிடம் மனு அளித்தனர். இதேபோல எஸ்.பி.வேலுமணி தரப்பிலும் கொறடா உத்தரவை மீறி செயல்பட்டதாக எடப்பாடி பழனிசாமி உள்ளிட்டவர்கள் மீது நடவடிக்கை கோரி சபாநாயகரிடம் மனு அளிக்கப்பட்டது.

அதன் பின்னர் இரு தரப்பிற்கும் இடையே சமாதானம் ஏற்பட்டு, கடந்த ஜூன் 25 அன்று எடப்பாடி பழனிசாமி, எஸ்.பி. வேலுமணியை கட்சியின் துணை பொதுச்செயலாளராக நியமித்து உத்தரவிட்டார்.

இந்த சூழலில் கோவை மாவட்டம் தொண்டாமுத்தூரில் அ.தி.மு.க. கொடிகள், எம்.ஜி.ஆர், ஜெயலலிதா மற்றும் எடப்பாடி பழனிசாமி ஆகியோரின் படங்கள் ஏதுமின்றி தனது ஆதரவாளர்களின் ஆலோசனை கூட்டத்தில் எஸ்.பி. வேலுமணி கலந்து கொண்டார்.

அப்போது தனது ஆதரவாளர்களிடம் பேசிய வேலுமணி, "தேர்தல் முடிந்து அடுத்த 25 நாட்கள் என்ன நடந்தது என்பது எனக்கு தெரியும். என்னை நம்பி 30 மாவட்ட செயலாளர்கள் போர்க்கொடி தூக்கி வந்த நிலையில், அவர்களுக்கு எந்த பொறுப்பும் வழங்காமல் தனக்கு மட்டும் பதவி கொடுப்பதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும். சி.வி.சண்முகம், சி.விஜயபாஸ்கர், தங்கமணி மற்றும் வீரமணி போன்ற கட்சியின் வளர்ச்சிக்கு உழைத்த மூத்த தலைவர்களை புறக்கணித்துவிட்டு தமக்கு மட்டும் பதவி தருவது அநீதியானது. எனவே எடப்பாடி பழனிசாமி கொடுத்த துணை பொதுச்செயலாளர் பதவியை ஏற்கப்போவதில்லை. அ.தி.மு.க.வை, தி.மு.க.வுடன் இணைப்பது அல்லது கூட்டணி வைப்பது போன்ற பேச்சுகள் எழுந்ததாலேயே உள்கட்சி பூசல் வெடித்தது. எம்.ஜி.ஆர். தி.மு.க.வை எதிர்ப்பதற்காகவே கட்சியை தொடங்கினார் என்பதால் தி.மு.க.வுடன் சமரசம் ஆவதை ஒருபோதும் ஏற்க முடியாது. அதேநேரம், தான் அ.தி.மு.க.விலேயே நீடித்து தி.மு.க.வை தொடர்ந்து எதிர்ப்பேன்" என்றும் தெளிவுபடுத்தினார்.

இது தொடர்பான வீடியோ சமூக ஊடகங்களில் வெளியாகி தமிழக அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதனிடையே, பழனியில் எம்.எல்.ஏ. அலுவலக திறப்புவிழாவில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் பங்கேற்றனர். அதனை தொடர்ந்து புதிய பதவிகளை புறக்கணிப்பதாக முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி. வேலுமணி, நத்தம் விஸ்வநாதன், சி.வி. சண்முகம் கூட்டாக பேட்டி அளித்தனர்.

எஸ்.பி. வேலுமணி கூறுகையில், எங்களுக்கு வழங்கப்பட்ட துணை பொதுச்செயலாளர் உள்ளிட்ட புதிய பொறுப்புகளை ஏற்க முடியாது. கட்சியை விட்டு நீக்கப்பட்ட சசிகலா, டி.டி.வி. தினகரனை சேர்த்து கட்சியை பலப்படுத்த வேண்டும் என்றார்.

இந்த சூழலில், சென்னை தலைமை செயலகத்தில் தமிழக நீர்வளத்துறை அமைச்சர் ஆனந்த் உடன் அ.தி.மு.க. அதிருப்தி எம்.எல்.ஏ.க்களான சி.வி. சண்முகம், எஸ்.பி. வேலுமணி, கே.பி. அன்பழகன் இன்று சந்தித்து பேசியது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்த நிலையில் இந்த சந்திப்பு முக்கியத்துவம் பெறுகிறது. இதனால், தமிழக அரசியலில் பரபரப்பு ஏற்பட்டு உள்ளது.

இதுபற்றி எஸ்.பி. வேலுமணி செய்தியாளர்கள் சந்திப்பில் கூறும்போது, அத்திக்கடவு அவிநாசி திட்டம் தொடர்பாக அமைச்சர் ஆனந்தை சந்தித்து பேசினோம். அதுதொடர்பான கோரிக்கைகளை முன்வைத்தோம் என்றார். நாங்கள் எப்போதும் அ.தி.மு.க.வினர்தான் என்று கூறினார்.

இதேபோன்று, சி.வி. சண்முகம் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசும்போது, எடப்பாடி பழனிசாமியை சந்தித்து பேசுவீர்களா? என கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், நான் ஏன் அவரை சந்திக்க வேண்டும். அவருக்கும், எனக்கும் என்ன உள்ளது? தேவையற்ற கேள்விகளுக்கு பதில் கூற விரும்பவில்லை என கூறினார்.

# 'வேளாண் பட்ஜெட்டில் புதிய அறிவிப்புகள் எதுவும் இல்லை' உதயநிதி ஸ்டாலின் விமர்சனம்

சென்னை, ஆக. 7



தவெக அரசின் வேளான் பட்ஜெட்டில் உருப்படியாக எதுவும் இல்லை என எதிர்க்கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார். சட்டசபை வளாகத்தில் செய்தியாளர்களை சந்தித்த அவர், இது தொடர்பாக பேசியதாவது;

தவெக ஆட்சி அமைந்து கடைசி 3 மாதங்களில் அதிகமாக பாதிக்கப்பட்டவர்கள் விவசாயிகள். அவர்களுக்கு ஆதரவாகவும், அவர்களுடைய உரிமைகளுக்கு குரல் கொடுக்கும் விதமாகவும், இந்த அரசுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாகவும் தான் இன்று எங்களின் தலைவரின் உத்தரவின் பேரில் திமுகவின் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் கருப்பு சட்டை அணிந்து எங்களின் எதிர்ப்பை தெரிவித்தோம். "தவெக அரசின் வேளாண் பட்ஜெட் என்று சொல்வதை விட, முதல்அமைச்சருக்கு ஜால்ரா அடித்த புகழுரை என்று சொல்லலாம். தவெக அரசின் வேளாண் பட்ஜெட்டில் குறிப்பிடத்தக்க விஷயங்கள் எதுவுமில்லை. புதிய அறிவிப்புகள் எதுவும் இல்லை. தேர்தல் நேரத்தில் பல வாக்குறுதிகளை கொடுத்து மக்களை ஏமாற்றினர். கொடுத்த வாக்குறுதிகளையும் நிறைவேற்றவில்லை. மேகதாது, பயிர்க்கடன் தள்ளுபடி, குறுவை சகுபடி பிரச்சினை என பல பிரச்சினைகள் தமிழகத்தில் உள்ளன.

எந்தவிதமான கோரிக்கைகளுக்கும், கேள்விகளுக்கும் முதல்அமைச்சர் வாய் திறந்து பதில் தரவில்லை. காவிரி விவகாரம் குறித்துப் பேச நாளை ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வர கடிதம் வழங்கியுள்ளோம். அப்போது நிறைய கேள்விகள் கேட்போம். முடிஞ்சா, தைரியம் இருந்தா முதல்அமைச்சர் வாயை திறந்து பதில் சொல்லட்டும்."

இவ்வாறு அவர் பேசினார்.

# பி.எப். பணம் முறைகேடு புகார்: கோட்டக்குப்பம் நகராட்சி தூய்மைப் பணியாளர்கள் திடீர் போராட்டம்

விழுப்புரம், ஆக. 7



விழுப்புரம் மாவட்டம் கோட்டக்குப்பம் நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வரும் தூய்மைப் பணியாளர்கள், தங்களது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட பி.எப் மற்றும் இ.எஸ்.ஐ தொகையை உரிய கணக்குகளில் செலுத்தாத ஒப்பந்த நிறுவனத்தைக் கண்டித்து திடீர் பணிப்புறக்கணிப்பு மற்றும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பி.எப். பணம் முறைகேடு புகார்

விழுப்புரம் மாவட்டம் கோட்டக்குப்பம் நகராட்சிப் பகுதிகளில் 100க்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்கள் ஒப்பந்த முறையில் தூய்மைப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களின் மாதாந்திர ஊதியத்திலிருந்து குறிப்பிட்ட தொகை, வருங்கால வைப்பு நிதி (பி.எப்) மற்றும் மருத்துவக் காப்பீடு (இ.எஸ்.ஐ)க்காகத் தொடர்ந்து பிடித்தம் செய்யப்பட்டு வந்தது. எனினும், அவ்வாறு பிடித்தம் செய்யப்பட்ட பல மாதங்களுக்கான நிதி, பணியாளர்களின் தனிநபர் கணக்குகளில் முறையாகச் செலுத்தப்படாமல் ஒப்பந்த நிறுவனங்களால் முறைகேடு செய்யப்பட்டுள்ளதாகப் பணியாளர்கள் குற்றம் சாட்டினர்.

பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட முழுமையான பி.எப் மற்றும் இ.எஸ்.ஐ நிலுவைத் தொகையை உடனடியாகச் சம்பந்தப்பட்ட கணக்குகளில் வரவு வைக்க வேண்டும். தொழிலாளர் நல விதிமுறைகளை மீறிச் செயல்படும் ஒப்பந்த நிறுவனங்கள் மீதும், அதனை முறையாகக் கண்காணிக்கத் தவறிய நகராட்சி நிர்வாகத்தின் மீதும் தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். நிலுவையில் உள்ள இதர ஊதியப் பலன்களைத் தாமதமின்றி வழங்க வேண்டும்.

ஒப்பந்தத் தூய்மைப் பணியாளர்களின் இந்தத் தொடர் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் காரணமாக, கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குப்பைகள் தேங்கிச் சுகாதாரச் சீர்கேடு ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது. நகராட்சி அதிகாரிகள் உடனடியாகப் பேச்சுவார்த்தை நடத்திப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் எனப் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சிறு, குறு விவசாயிகளுக்கு 'அஞ்சலையம்மாள்' விருது: வேளாண் பட்ஜெட்டில் அறிவிப்பு

சென்னை, ஆக. 7




தமிழக சட்டசபையில் நேற்று 202627ம் ஆண்டுக்கான த.வெ.க. அரசின் முதல் 'பட்ஜெட்' தாக்கல் செய்யப்பட்டது. இந்த நிலையில், சட்டசபையில் 202627ம் ஆண்டுக்கான வேளாண் பட்ஜெட்டை வேளாண் துறை அமைச்சர் வினோத் தாக்கல் செய்து வருகிறார்.

மக்கள் சேவகர் அஞ்சலையம்மாள் சிறு, குறு விவசாயி விருது குறித்து அமைச்சர் வினோத் கூறியதாவது:

202627 ஆம் ஆண்டில், சிறு, குறு விவசாயிகளை ஊக்குவிக்க, 'மக்கள் சேவகர் அஞ்சலையம்மாள்' பெயரில் மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட்டிகள் நடத்தப்பட்டு பயறு வகைகள், எண்ணெய்வித்துகள் சிறுதானியங்கள், உள்ளிட்ட 10 பயிர்களில் அதிக மகசூல் பெறும் முதல் 3 விவசாயிகளுக்கு முறையே 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய், ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய், ஒரு லட்சம் ரூபாய் என மொத்தம் 30 விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்க 50 லட்சம் ரூபாய் மாநில நிதியிலிருந்து ஒதுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# அலங்காநல்லூர் அருகே டேங்கர் லாரி வெறியாட்டம்: மதுபோதை ஓட்டுநரால் தொடர் விபத்து; ஒருவர் பலி

மதுரை, ஆக. 7



மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே கடுமையான மதுபோதையில் டேங்கர் லாரியை இயக்கி, தொடர்விபத்துகளை ஏற்படுத்திய ஓட்டுநரை பொதுமக்கள் வீதி வீதியாக விரட்டிப் பிடித்து போலீசில் ஒப்படைத்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் பகுதியைச் சேர்ந்த வாலிபர் ஜெயப்பிரகாஷ் (வயது 29). அவர் மிகக் கடுமையான மதுபோதையில் டேங்கர் லாரி ஒன்றை ஓட்டிச் சென்றார். அப்போது, போதையின் உச்சத்தில் இருந்ததால் லாரி அவரது கட்டுப்பாட்டை இழந்து, சாலையில் சென்று கொண்டிருந்த சுமார் 10 க்கும் மேற்பட்ட வாகனங்கள் மீது அடுத்தடுத்து பயங்கரமாக மோதியது.

இந்த கோர விபத்தில், லாரி மோதியதில் முத்துப்பாண்டி என்பவர் படுகாயமடைந்தார். அதைக் கண்டு அதிர்ச்சியடைந்த மக்கள் அவரை மீட்டு, சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். ஆனால், அவர் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார். மேலும், விபத்துக்குள்ளான மற்ற வாகனங்களில் பயணித்த 10 க்கும் மேற்பட்டோர் பலத்தகாயமடைந்து தற்பொழுது ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்தை ஏற்படுத்திய பின்னரும் ஜெயப்பிரகாஷ் லாரியை நிறுத்தாமல் தப்பியோட முயன்றார். இதனால் ஆத்திரமடைந்த அப்பகுதி பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள், லாரியை சுமார் 4 கிலோமீட்டர் தூரத்திற்கு ஓட ஓட விரட்டிச் சென்றனர். இறுதியாக லாரியை மடக்கிப் பிடித்த பொதுமக்கள், போதையில் இருந்த ஓட்டுநரை கீழே இழுத்துப்போட்டு சரமாரியாக தர்ம அடி கொடுத்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த அலங்காநல்லூர் போலீசார், பொதுமக்களிடம் இருந்து ஓட்டுநரை மீட்டனர். காயமடைந்த அவரை சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். மேலும் விபத்து மற்றும் பொதுமக்களின் தாக்குதல் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மதுபோதையால் ஏற்பட்ட இந்த கோர விபத்து அப்பகுதியில் பெரும் சோகத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

# விவசாயிகள் நலனிற்காக பயிர் கடன் ரூ.17,000 கோடி; இலவச மின்சாரத்திற்கு ரூ.7,432 கோடி ஒதுக்கீடு

சென்னை ஆக. 7




தமிழக விவசாயிகளின் நலனிற்காக பயிர் கடன் ரூ.17,000 கோடியும், இலவச மின்சாரத்திற்கு ரூ.7,432 கோடியும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

தமிழக சட்டசபையில், 202627ம் ஆண்டுக்கான பொது பட்ஜெட் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நேற்று தாக்கல் செய்யப்பட்ட நிலையில், வேளாண் பட்ஜெட் இன்று தாக்கல் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது. இதன்படி, காலை 9.30 மணிக்கு பட்ஜெட் கூட்டத்தொடர் தொடங்கியது.

இதனை முன்னிட்டு, தமிழக முதல்அமைச்சர் விஜய், எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, துறை சார்ந்த அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் உள்ளிட்டோரும் அவைக்கு வருகை தந்தனர்.

வேளாண் பட்ஜெட் தாக்கலை முன்னிட்டு, தமிழக முதல்அமைச்சர் விஜய்யை நேரில் சந்தித்து தமிழக வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் ர. வினோத் ஆசி பெற்றார். இதன்பின்னர் சபாநாயகர் பிரபாகர் அவைக்கு வருகை தந்ததும், உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று மரியாதை தந்தனர். அவையில் திருக்குறள் வாசிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து, தமிழக வேளாண் துறை அமைச்சர் வினோத், 202627ம் ஆண்டுக்கான வேளாண் பட்ஜெட்டை தாக்கல் செய்து பேசினார்.

அவர் பேசும்போது, த.வெ.க. அரசின் முதல் வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்படுகிறது. விவசாய குடும்பங்களின் மகனாக இருப்பதால் இலவச மும்முனை மின்சாரத்தை தொடர முதல்வர் அறிவுரை வழங்கி உள்ளார். வேளாண்மையை பெருக்க பல்வேறு திட்டங்களை மேற்கொள்ள உள்ளோம் என கூறினார்.

ஓர் அரசு வல்லரசாகும் முன்பு விவசாயிகளின் அரசாக மாற வேண்டும் என்பதே முதல்வரின் கொள்கை என்று அவர் பேசியுள்ளார். தொடர்ந்து பட்ஜெட்டில் விவசாயிகள் பயன் பெறும் வகையிலான பல்வேறு திட்டங்களை அறிவித்து அவர் பேசினார்.

அதில், தமிழக விவசாயிகளுக்கான இலவச மின்சாரத்திற்காக ரூ.7,432 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

விவசாயிகளுக்கு பயிர் கடன் ரூ.17,000 கோடி

உயிர்ம உர பயன்பாட்டை ஊக்குவிக்க விவசாயிகளுக்கு ரூ.4,000 சிறப்பு ஊக்கத்தொகை.

உழவர் ஐ.டி. பெற்ற 3 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.6 கோடியில் மண்வள அட்டைகள் வழங்கப்படும்.

விவசாயிகளின் வருமான மேம்பாட்டு ஆணையம் ரூ.5.20 கோடி ஏ.ஐ. அடிப்படையிலான உழவர் செயலி ரூ.2 கோடி ஒரு லட்சம் விவசாயிகளுக்கு மண் நல அட்டை 4.75 லட்சம் விவசாயிகளுக்கு சிறுதானிய சாகுபடி இயக்கம் 24,000 விவசாயிகளுக்கு மானியத்தில் வேளாண் கருவிகள் 1,000 விவசாயிகளுக்கு மானியத்தில் சூரிய பம்புசெட் 100 விவசாயிகளுக்கு 50% மானியத்தில் கதிரடிக்கும் களம் உள்ளிட்டவற்றை அறிவித்து உள்ளார்.

# பிரபல யூடியூபர் சவுக்கு சங்கரின் 13 வயது மகன் தூக்குப்போட்டு தற்கொலை

மரக்காணம், ஆக. 7

மரக்காணம் அருகே தாத்தா வீட்டில் இருந்த பிரபல யூடியூபர் சவுக்கு சங்கரின் 13 வயது மகன் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டான். இதுதொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். சென்னையை சேர்ந்த பிரபல யூடியூபர் சவுக்கு சங்கர். இவரது மனைவி ஆர்த்தி, சென்னை ஐகோர்ட்டில் வக்கீலாக பணியாற்றி வருகிறார். இவர்களுடைய மகன் தியோ ஆழிசை (வயது 13). கருத்துவேறுபாடு காரணமாக சவுக்கு சங்கரும், ஆர்த்தியும் தனித்தனியாக வசித்து வருவதாக கூறப்படுகிறது. விழுப்புரம் மாவட்டம் நடுக்குப்பத்தில் ஆர்த்தியின் பெற்றோர் உள்ளனர். அங்கு தாத்தா செந்தாமரைக் கண்ணன் மற்றும் பாட்டி கவனிப்பில் இருந்து சிறுவன் தியோ ஆழிசை, மரக்காணம் பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வந்தான். தாய் மீதான ஏக்கத்தில் கடந்த சில நாட்களாக சிறுவன் சோகமாக இருந்துள்ளான். எனவே தாயார் ஆர்த்தியை பார்ப்பதற்காக சென்னைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். அங்கு சில நாட்கள் இருந்த நிலையில், நேற்று முன்தினம் சிறுவன் தியோ ஆழிசை நடுக்குப்பம் கிராமத்துக்கு அழைத்து வரப்பட்டான். நேற்று காலை வழக்கம்போல் பள்ளிக்கு கிளம்புமாறு பேரனிடம் தாத்தா, பாட்டி கூறிவிட்டு மற்ற வேலைகளை கவனித்தனர். வீட்டின் பின்பக்கம் சென்ற சிறுவன் நீண்ட நேரமாகியும் வரவில்லை. சந்தேகமடைந்த தாத்தா, பாட்டி பின்பக்கம் சென்று பார்த்தபோது, அங்குள்ள வேப்ப மரத்தில் சிறுவன் தியோ ஆழிசை தூக்கில் தொங்கியவாறு இருந்தான். இதைபார்த்து அதிர்ச்சி அடைந்த அவர்கள், சிறுவனை மீட்டு மரக்காணம் அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். அங்கு சிறுவனை பரிசோதித்த டாக்டர்கள், ஏற்கனவே தியோ ஆழிசை இறந்து விட்டதாக தெரிவித்தனர். இதுதொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். பள்ளிக்கு செல்ல விருப்பமில்லாமல் சிறுவன் தற்கொலை செய்து கொண்டது தெரியவந்தது.

# 9ம் வகுப்பு மாணவியை கடத்தி பாலியல் வன்கொடுமை: வாலிபருக்கு 20 ஆண்டுகள் சிறை



திருச்சி, ஆக. 7

திருச்சி மாவட்டம் துவரங்குறிச்சி பகுதியை சேர்ந்த 14 வயதுடைய 9ம்வகுப்பு மாணவி கடந்த 742022 அன்று வழக்கம் போல் பள்ளிக்கு சென்றார். பின்னர் அவர் வீடு திரும்பவில்லை. அக்கம் பக்கத்தில் தேடிப்பார்த்தும் கிடைக்காததால் இதுபற்றி அவருடைய பெற்றோர் துவரங்குறிச்சி போலீஸ் நிலையத்தில் புகார் செய்தனர். அதன்பேரில் சிறுமி மாயம் என்ற பிரிவில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி சிறுமியை தேடிவந்தனர். விசாரணையில் அந்த சிறுமியை மருங்காபுரி தாலுகா கஞ்சநாயக்கன் பட்டி, செட்டியபட்டி, கோவில்பாறைக்களம் பகுதியை சேர்ந்த துரை என்பவரின் மகன் சின்னையா (வயது 21), கடத்திச்சென்று பாலியல் வன்கொடுமை செய்தது தெரியவந்தது.

அத்துடன்சின்னையாஏற்கனவேமற்றொருபோக்சோ வழக்கில் கைதாகி ஜாமீனில் வெளியே வந்துள்ளதும் தெரியவந்தது. இதைத்தொடர்ந்து சிறுமி மாயம் என்ற வழக்கை மாற்றி, சின்னையா மீது போக்சோ சட்டம் உள்பட 4 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து அவரை கைது செய்தனர். இதுதொடர்பான வழக்கு திருச்சி மகிளா கோர்ட்டில் நீதிபதி சண்முகபிரியா முன்னிலையில் நடந்து வந்தது. போலீசார் தரப்பில் அரசு வக்கீல் சுமதி ஆஜரானார். இந்த வழக்கில் சாட்சி விசாரணைகள் நிறைவடைந்ததை தொடர்ந்து நேற்று தீர்ப்பு கூறப்பட்டது. இதில் குற்றம்சாட்டப்பட்ட சின்னையாவுக்கு போக்சோ சட்டத்தின் கீழ் 20 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.20 ஆயிரம் அபராதம் விதித்து நீதிபதி தீர்ப்பு கூறினார்.

# குமரி: ஒரே கல்லில் உருவான 11 அடி உயர கிருஷ்ணர் சிலை



கன்னியாகுமரி, ஆக. 7

15 டன் எடையில் ஒரே கல்லில் உருவாக்கப்பட்ட 11 அடி உயர கிருஷ்ணர் சிலை குமரியில் இருந்து லாரி மூலம் நெல்லைக்கு அனுப்பி வைக் கப்பட்டது.

குமரி மாவட்டம் மயிலாடியில் ஏராளமான சிற்பக்கூடங்கள்உள்ளன. இங்குள்ளசிற்பக்கூடத்தில் இருந்து ஏராளமான சாமிசிலைகள் செய்யப்பட்டு உள்நாடு மற்றும் வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. மயிலாடி சிற்பம் புவிசார் குறியீடு பெற்றது குறிப்பிடத்தக்கது. இந்தநிலையில் மயி லாடி சேந்தன்புதூர் பகுதியை சேர்ந்த சிற்பி சுப்பிரமணியன் ஆசாரியின் சிற்பக்கூடத்தில் 15 டன் எடையுள்ள ஒரே கல்லில்கிருஷ்ணர்சிலைவடிவமைக்கப்பட்டுள்ளது. இது 11 அடி உயரமும், 32 அடி அகலத்தில் கிருஷ்ணர் சிலையை த்ரூபமாக கடந்த 8 மாதங்களாக தொழிலாளர்கள் வடிவமைத்தனர்.

திருநெல்வேலி டவுனில் புதியதாக கட்டப்பட உள்ள கிருஷ்ணசாமி கோவிலுக்கு அனுப்புவதற்காக இந்த சிலை வடிவமைக்கப்பட்டது. அந்த கோவிலில் இந்த சிலை நிறுவப்பட உள்ளது. அதன்படி கிருஷ்ணர் சிலையை நெல்லைக்கு பாதுகாப்பாக அனுப்பி வைக்கும் நிகழ்ச்சி நேற்று நடந்தது.

அதன்படி மயிலாடியில் சிற்ப கலைஞர்கள் சாமிக்கு சிறப்பு பூஜைகள் செய்தனர். பின்னர் 10 சக்கரம் கொண்ட கனரக லாரியில் சிலையை கிரேன் மூலம் ஏற்றி நெல்லைக்கு அனுப்பி வைத்தனர். இந்த சாமி சிலையை காண அங்கு ஏராளமான பக்தர்கள் திரண்டு பார்வையிட்டனர்.

# கச்சத்தீவு அருகே 8 தமிழக மீனவர்களை கைது செய்த இலங்கை கடற்படை




ராமநாதபுரம், ஆக. 7

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்வதும், அவர்களின் படகுகள் மற்றும் உடைமைகளை சேதப்படுத்துவதுமான சம்பவங்கள் தொடர்ந்துஅரங்கேறிவருகின்றன.இதைதடுப்பதற்கு மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக மீனவர்கள் தொடர்ந்து கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர்.

இந்தநிலையில்,ராமேஸ்வரம்மீன்பிடிதுறைமுகத்தில் இருந்து நேற்று மீன் பிடிப்பதற்கான அனுமதி சீட்டை பெற்றுசுமார்500க்கும்மேற்பட்டவிசைப்படகுகளில் மீனவர்கள் மீன் பிடிக்க கடலுக்கு சென்றனர். இந்த நிலையில கச்சத்தீவு அருகே தமிழக மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, அந்த பகுதியில் ரோந்து சென்ற இலங்கை கடற்படையினர், தமிழக மீனவர்கள் 8 பேரை கைது செய்து, அவர்களின் விசைப்படகையும் பறிமுதல் செய்தனர்.

அந்த மீனவர்கள் எல்லை தாண்டி சென்றதாக கூறப்படும் நிலையில், அவர்களிடம் இலங்கை கடற்படையினர் நடத்திய விசாரணையில், தங்களின் படகு சேதமடைந்ததால் எல்லை தாண்டி வந்தோம் என்றுஅவர்கள்கூறியதாகதகவல்வெளியாகியுள்ளது. இந்த நிலையில், கைது செய்யப்பட்ட 8 மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் இலங்கைக்கு அழைத்துச் சென்று அந்நாட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்துள்ளனர்.

# திண்டுக்கல்: கிராமத்துக்குள் புகுந்து மக்களை அச்சுறுத்திய காட்டெருமை



திண்டுக்கல், ஆக. 7

கொடைக்கானல் கீழ்மலையில் உள்ள மங்களம்கொம்பு, தாண்டிக்குடி. பெரும்பாறை, கானல்காடு, கே.சி.பட்டி, குப்பம்மாள்பட்டி உள்ளிட்ட மலைக் கிராமங்களில் காட்டு யானை, காட்டெருமைகள் உள்ளிட்ட வனவிலங்குக ளின் நடமாட்டம் அதிகரித்து வருகிறது. தற்போது வெயில் வாட்டி வதைப்பதால் இரை மற்றும் தண்ணீர் தேடி மலைக்கிராமங்களுக்குள் வனவிலங்கு கள் புகுந்து மக்களை பீதியடைய செய்து வருகின்றன.

இந்தநிலையில் பெரும்பாறை அருகே உள்ள மஞ்சள்பரப்பு கிராமத்துக்குள் நேற்று கம்பீர தோற்றத்துடன் காட்டெருமை ஒன்று உலா வந்தது. அந்த காட்டெருமை மஞ்சள்பரப்பில் சாலை ஓரத்தில் நிறுத்தப் பட்டிருந்த கார், மோட்டார் சைக்கிள்களை உரசிக்கொண்டு சென்றது.

இதனை பார்த் ததும் கிராம மக்கள் அச்சம் அடைந்த துடன், பாதுகாப்பான இடங்களுக்கு சென்று தஞ்சம் அடைந்தனர்.காட்டெருமையைகண்டஇளைஞர்கள் சிலர் ஆபத்தை உணராமல் அதன் அருகே சென்று தங்களதுசெல்போனில்புகைப்படம்மற்றும்வீடியோ எடுத்தனர். சுமார் 1 மணி நேரமாக கிராமத் தில் உலா வந்த காட்டெருமை, அதன்பிறகு வனப்பகுதிக்குள் சென்றுவிட்டது.

# குற்றாலத்தில் சிறப்பு கண்காணிப்பு குழு அமைக்க மதுரை ஐகோர்ட்டு கிளை உத்தரவு



மதுரை, ஆக. 7

தென்காசி மாவட்டம் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக, குற்றால அருவிகளில் நீர்வரத்து அதிகரித்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. எனவே, சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு கருதி, அருவிகளில் குளிக்க தற்காலிக தடை விதிக்கப்பட்டிருந்தது. தற்போது மழையின் தாக்கம் குறைந்து, நீர்வரத்து சீரான நிலைக்கு வந்துள்ளது.

குற்றாலத்தின் மெயின் அருவி மற்றும் ஐந்தருவியில் வெள்ளம் குறைந்ததை அடுத்து, சுற்றுலா பயணிகள் குளிக்க முழு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் புலி அருவி மற்றும் சிற்றருவியில் பாதுகாப்பான அளவில் தண்ணீர் கொட்டுவதால் பொதுமக்கள் உற்சாகத்துடன் குளித்து மகிழ்கின்றனர்.

இந்த நிலையில், சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் அடிப்படை வசதிகளை உறுதி செய்ய உத்தரவிடக்கோரி மதுரை ஐகோர்ட்டு கிளையில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், குற்றாலத்தில் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய சிறப்பு கண்காணிப்பு அமைக்க உத்தரவிட்டுள்ளது.

அதோட், 'நந்தவன திட்டம்' குறித்து விரிவான அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என மாவட்ட கலெக்டருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், குற்றாலத்தில் உள்ள கடைகளில் எரிவாயு சிலிண்டர் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. குற்றால அருவி பகுதிகளில் 72 கடைகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மேட்டூர் அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்வு




சேலம், ஆக. 7

கர்நாடகா மற்றும் கேரளம் மாநிலங்களில் மழை தீவிரமடைந்ததன் காரண மாக கபினி அணையில் இருந்து கடந்த 1ந் தேதி வினாடிக்கு 25 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இவ்வாறு திறந்து விடப்பட்ட தண்ணீர் நேற்று முன்தினம் இரவு மேட்டூர் அணையை வந்தடைந்தது. இதன் காரணமாக மேட்டூர் அணை நீர்மட்டம் ஒரே நாளில் ஒரு அடி உயர்ந்துள்ளது. அதாவது நேற்று முன்தினம் காலை 73.02 அடியாக இருந்த அணை நீர்மட்டம் நேற்று காலை 8 மணி நிலவரப்படி 74.01 அடி யாக உயர்ந்தது.

அணைக்கு காலையில் வினாடிக்கு 11 ஆயிரத்து 988 கனஅடி வீதம் தண் ணீர் வந்து கொண்டிருந்தது. பின்னர் நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து மாலை 4 மணிக்கு வினாடிக்கு 18 ஆயிரத்து 905 கனஅடியாக இருந்தது. இதன் எதிரொலியாக மாலை 4 மணி நிலவரப்படி 74.55 அடியாக நீர்மட்டம் உயர்ந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 1,500 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. நீர்வரத்து தொடர்ந்து அதிகரிக்கும் பட்சத்தில் அணை நீர்மட்டம் மீண்டும் படிப்படியாக உயரும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# தமிழ்நாட்டை குடிகார நாடாக்க தவெக அரசு திட்டம்: ஆர்பி உதயகுமார் வேதனை



மதுரை, ஆக. 7

அதிமுக முன்னாள் அமைச்சர் ஆர்பி உதயகுமார் இன்று வெளியிட்டுள்ள வீடியோ பதிவு: தவெக அரசு பொறுப்பேற்று முதல் பட்ஜெட்டை தாக்கல் செய்துள்ளது. இதில், விஜய்தலைமையிலானஅரசின் இயலாமையைபட்டவர்த்தமாகஅரங்கேற்றியுள்ளது. கடந்தாண்டு நிலவரப்படி அரசின் கடன் சுமை ரூ.10 லட்சம் கோடி. கடன் அளவு ஆண்டுதோறும் கூடிக் கொண்டே தான் போகும். 50 ஆண்டுகள் ஆனாலும், கடன் அளவை குறைக்க முடியாது. 3 மாதங்களில் சுமார் 22 ஆயிரம் கோடி கடன் வாங்கி இருக்கிறோம். இந்த நிதி ஆண்டில் 1.22 லட்சம் கோடி கடன் பெற திட்டமிட்டுஇருக்கிறோம்எனஒப்புதல்வாக்குமூலம் தந்திருக்கிறார் நிதித்துறை செயலர். ஆனால், தவெக பட்ஜெட்டில் அறிவிப்புகளுக்கு பஞ்சமில்லை.

திட்டங்களில் பெயர் மாற்றத்தை செய்து கின்னஸ் சாதனை படைத்திருக்கிறது. பள்ளிக்கல்விக்கும், உயர்கல்விக்கும் நிதி குறைக்கப்பட்டுள்ளது. ஜென்சி தலைமுறையால் ஆட்சி அரியணையில் அமர்ந்த விஜய்க்குகல்வியாமுக்கியம்?மதுபானவிற்பனையை எப்படி உயர்த்துவது என்பது தான் தவெக அரசின் கவலையாக இருக்கிறது. ஆன்லைனில் மதுபானம் முன்பதிவுசெய்து,எந்தகடையில்வேண்டுமானாலும் சரக்கு பெற்றுக் கொள்ளலாம். தமிழ்நாடு குடிகார நாடாக மாறுவதை தவிர, இது கல்வியில் சிறந்த தமிழ்நாடுஎன்றுஅழைக்கநமக்குவாய்ப்புஇருக்குமா என்று தெரியவில்லை.

இந்த ஐந்து ஆண்டுகளிலே ரூ.10 லட்சம் கோடி கடன் வாங்க திட்டமிட்டு இருப்பது நமக்கு அதிர்ச்சி அளிக்கிறது. தேர்தல் வாக்குறுதியில் கூறிய எதையும் தொட்டு கூட பார்க்கவில்லை. பெயர் மாற்றத்தில் கின்னஸ்சாதனைபடைத்துள்ளதுநிதிநிலைஅறிக்கை. மொத்தத்தில் தவெக அரசு தங்கள் இயலாமையை செய்து விழி பிதுங்கி இருப்பது நமக்கு கண்கூடாக தெரிகிறது.

# மாமல்லபுரம் தலசயனபெருமாள் கோயிலில் தெப்பக்குளத்தில் செத்து மிதக்கும் மீன்கள்



மாமல்லபுரம்

இந்தியாவின் 108 திவ்ய தேசங்களில் 63வது திவ்ய தேசமாக மாமல்லபுரத்தில் உள்ள தலசயனபெருமாள் கோயில் விளங்கி வருகிறது. இக்கோயிலில் தமிழகம் உள்பட இந்தியாவின் அனைத்து மாநிலங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் நிலம் சம்பந்தமான பிரச்னைகள் தீருவதற்கு, தலசயன பெருமாள் மற்றும் நிலமங்கை தாயாரை வழிபட்டு செல்கின்றனர். மாமல்லபுரம் கடற்கரைக்கு செல்லும் வழியில், இக்கோயிலுக்கு சொந்தமான புண்டரீக புஷ்கரணி தெப்பகுளம் அமைந்துள்ளது. இக்குளத்தில் ஏராளமான மீன்களும் நீர்கோழிகளும் துள்ளி விளையாடுவதை ஏராளமான பக்தர்கள் கண்டு ரசிப்பது வழக்கம்.

இந்திய செய்திகள்

கடந்த சில மாதங்களாக தொடர் வெப்ப அலை காரணமாக, மாமல்லபுரம் தலசயனபெருமாள் கோயிலுக்கு சொந்த புண்டரீக புஷ்கரணி தெப்பக்குளத்தில் உள்ள நீர் வற்றியது. இதனால் கடந்தசிலநாட்களாகஇக்குளத்தில்இருந்தஅனைத்து மீன்களும் செத்து மிதப்பதால், அப்பகுதியில் கடும் துர்நாற்றம் வீசி வருகிறது. இதனால் தெப்பக்குளத்துக்கு வரும்சுற்றுலாபயணிகள்மூக்கை கர்ச்சீப்பால் மூடியபடி கடந்து செல்ல அவலநிலை நீடிக்கிறது. எனவே, தலசயனபெருமாள் கோயிலின் புண்டரீக புஷ்கரணி தெப்பக்குளத்தில் இறந்து கிடக்கும் மீன்களை உடனடியாக அகற்றி, சுற்றுப்புற தூய்மை பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், இந்த தெப்பக்குளத்தை வரும் வடகிழக்கு பருவமழைக்கு முன்பாக முறையாக தூர்வாரி ஆழப்படுத்தி, கரைகளை பலப்படுத்துவதற்கு மாவட்ட கலெக்டர் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை உயர் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பக்தர்கள் வலியுறுத்துகின்றனர்.

# பூண்டி ஏரிக்கு நீர்வரத்து அதிகரிப்பு: வினாடிக்கு 400 கன அடியாக உயர்வு



திருவள்ளூர், Aka. 7

திருவள்ளூர் மாவட்டம் பூண்டி சத்தியமூர்த்தி சாகர் நீர்த்தேக்கத்தின்35அடி மொத்த உயரத்தில்26.57அடி உயரத்துக்கும் மொத்த கொள்ளளவான 3231 மில்லியன் கன அடியில் 1073 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது. இந்தநிலையில், ஆந்திர மாநிலம் கண்டலேறு நீர்த்தேக்கத்தில் இருந்து கிருஷ்ணா கால்வாய் வழியாக வினாடிக்கு 400 கன அடி வீதம் நீர்வந்து கொண்டுள்ளது. சென்னை மாநகர மக்களின்குடிநீருக்காக இணைப்புகால்வாய் வழியாக வினாடிக்கு 286 கன அடி வீதமும் பேபி கால்வாய் வழியாக வினாடிக்கு 16 கன அடி வீதமும் தண்ணீர் அனுப்பி வைக்கப்படுகிறது.

செம்பரம்பாக்கம் ஏரியின் 24 அடி மொத்த உயரத்தில் 17.71 அடி உயரத்திற்கும் மொத்த கொள்ளளவான 3645 மில்லியன் கன அடியில் தற்போது 2,071 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது. சென்னை மாநகர மக்களின் குடிநீருக்காக வினாடிக்கு 159 கன அடி வீதம் தண்ணீர் அனுப்பி வைக்கப்படுகிறது.

புழல் ஏரியின் 21.20 அடி மொத்த உயரத்தில் 12.99 அடி உயரத்திற்கும் மொத்த கொள்ளளவான 3300 மில்லியன் கன அடியில் தற்போது 1711 மில்லியன் கன அடியாகவும் தண்ணீர் இருப்பு உள்ளது. ஏரிக்கு நீர்வரத்து வினாடிக்கு 245 கன அடியாக உள்ளது. சென்னை மாநகர மக்களின் குடிநீருக்காக வினாடிக்கு 182

3 கன அடி தண்ணீர் அனுப்பி வைக்கப்படுகிறது. சோழவரம் ஏரியின் 18.86 அடி மொத்த உயரத்தில் 1.66 அடி உயரத்திற்கும், மொத்த கொள்ளளவான 1081 மில்லியன்கனஅடியில்தற்போது 96 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது. ஏரிக்கு நீர்வரத்து இல்லை.

இதுபோல், கண்ணன்கோட்டை ஏரியின் 36.61 அடி மொத்த உயரத்தில் 28.90 அடி உயரத்திற்கும் மொத்த கொள்ளளவான500மில்லியன்கனஅடியில்தற்போது தண்ணீர் இருப்பு 262 மில்லியன் கன அடியாகவும் உள்ளது. ஏரிக்கு நீர்வரத்து இல்லை. சென்னை மாநகர மக்களின் குடிநீருக்காக வினாடிக்கு 4 கன அடி வீதம் தண்ணீர் அனுப்பி வைக்கப்படுகிறது. சென்னை மாநகர மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக திருவள்ளூர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 5 நீர்த்தேக்கங்களின் மொத்த கொள்ளளவான 11,757 மில்லியன் கன அடியில் தற்போது 5,182 மில்லியன் கன அடி நீர் இருப்பு உள்ளது.

தின கனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

07.08.2026

# வேளாண் பட்ஜெட் விவசாயிகளுக்கு மிகப்பெரிய ஏமாற்றம் எடப்பாடி பழனிசாமி



சென்னை, ஆக. 7

தமிழக சட்டசபையில் நேற்று 202627ம் ஆண்டுக்கான த.வெ.க. அரசின் முதல் 'பட்ஜெட்' தாக்கல் செய்யப்பட்டது. இந்த நிலையில், சட்டசபையில் 2026 27ம் ஆண்டுக்கான வேளாண் பட்ஜெட்டை வேளாண் துறை அமைச்சர் வினோத் தாக்கல் செய்தார். இந்த நிலையில் பட்ஜெட் குறித்து அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தனது கருத்தை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது;

ளோண் பட்ஜெட் மீது விவசாயிகள் பெரிய எதிர்பார்ப்புடன் இருந்தனர். ஆனால் மிகப்பெரிய ஏமாற்றமே மிஞ்சியது. சுமார் இரண்டரை மணி நேர பட்ஜெட் அறிவிப்பில் முக்கிய திட்டம் ஏதுமில்லை. கரும்பு டன் ஒன்றுக்கு ஆதார விலை ரூ.4,500 என்றார்கள் அந்த வாக்குறுதி என்ன ஆனது? நெல் குவிண்டாலுக்கு ரூ.3.500 வழங்கப்படும் என்ற வாக்குறுதி என்ன ஆனது?

விவசாயிகளை ஏமாற்றும் பட்ஜெட் இது. விவசாயிகளுக்கு இது நன்மை பயக்கக்கூடிய பட்ஜெட் இல்லை. முந்தைய ஆட்சியைப் போல வேளான் பட்ஜெட் என்ற பெயரில் நாடகம் அரங்கேற்றியுள்ளனர். தேர்தல் நேரத்தில் இனிக்க இனிக்க பேசிவிட்டு ஏமாற்றி உள்ளது தவெக அரசு. குடிமராமத்து என்ற அற்புதமான திட்டம் பற்றி பட்ஜெட்டில் ஏதுமில்லை.

தவெக வேளாண் பட்ஜெட்டின் சாதனை சும்மர் 2 மணி நேரம் வாசிக்கப்பட்டதுதான். காவிரி விவகாரத்தில் முதல் அமைச்சர் வாய் திறந்து பேசுவதில்லை. தமிழ்நாட்டு முதல்அமைச்சர் கர்நாடகாவுக்கு வர வேண்டாம் என அம்மாநில முதல்மந்திரி சொல்கிறார். தமிழ்நாட்டுக்கு இது எவ்வளவு பெரிய தலைகுனிவு என முதல்அமைச்சர் எண்ணிப்பார்க்க வேண்டும். ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களுக்கும் தலைகுனிவு ஏற்படும் வகையில் முதல் அமைச்சர் நடந்தது வருத்தமளிக்கிறது.

பொது பட்ஜெட்டுக்கு பூஜ்ஜியம் மார்க், வேளான் பட்ஜெட்டுக்கு மைனஸ் பூஜ்ஜியம் கொடுக்கலாம். இவ்வாறு அவர் கூறினார்.



தமிழகத்தில் நிதிநிலை மிகவும் மோசமாக உள்ளது தமிழக அரசின் நிதி நிலைமை மோசமாக உள்ளது மின்வாரியம், போக்குவரத்து துறை, ஆவின் உள்ளிட்ட அனைத்து துறைகளும் மூடும் நிலையில் உள்ளது நிதி ஆதாரத்தை பெருக்க அதிமுகவும், திமுகவும் எவ்விதநடவடிக்கைகளும்எடுக்கவில்லைநிதிஆதாரம்சரிசெய்யப்பட்டஉடன்இன்னும் பல்வேறு திட்டங்களை முதல்வர் விஜய் நிறைவேற்றி தருவார். அமைச்சர் சிடிஆர் நிர்மல்குமார்

# திருவண்ணாமலை தலைமையில்பெருந்தலைவர் காமராஜர்காலைஉணவுதிட்டம் (PKBFS) விரிவாக்கம்தொடர்பானஆய்வுகூட்டம்




திருவண்ணாமலைமாவட்டஆட்சித்தலைவர்திருமதி.வந்தனாகார்க்தலைமையில் மாவட்டஆட்சியர்அலுவலககூட்டரங்கில்பெருந்தலைவர்காமராஜர்காலைஉணவுதிட்டம் (PKBFS) விரிவாக்கம் தொடர்பான ஆய்வுகூட்டம்நடைபெற்றது.

இக்கூட்டத்தில்6முதல்8ஆம்வகுப்புவரையில்பயிலும்மாணவர்களின்பள்ளிஎண்ணிக்கையினைமறுஆய்வுசெய்திடஅனைத்துவட்டாரஇயக்கமேலாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது. வட்டாரம்வாரியாகபள்ளிகள்மற்றும்மாணவர்களின்எண்ணிக்கையினைமறுஆய்வுசெய்துஅறிக்கைஅளிக்கதெரிவிக்கப்பட்டது.

பள்ளிகள்வாரியாகமாணவர்களின்எண்ணிக்கைகுறித்தவிவரத்தினைதலைமையாசிரியரின்கையொப்பத்துடன்பெற்றுசமர்ப்பிக்கஅறிவுறுத்தப்பட்டது.புதியதாக பெருந்தலைவர்காமராஜர்காலைஉணவுதிட்டம்( PK BFS) செயல்படுத்தப்படும்பள்ளிகளில்உள்ளசமையற்கூடங்களின்நிலை, பழுதுநீக்கம்போன்றவிவரங்களை ஆய்வுசெய்துஅறிக்கையாகஅளிக்கதெரிவிக்கப்பட்டது.



கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலம், வார்டு எண்.56க்குட்பட்ட ஒண்டிப்புதூர், சூர்யா நகர் பகுதியில்பாதாளசாக்கடைதிட்டத்தின்கீழ்குழாய்கள் பதிப்பது குறித்து பொதுமக்களுடன் ஆலோசனை செய்து, அவர்களது ஒத்துழைப்புடன் பணிகளை மேற்கொள்ள மாநகராட்சி ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா இ.ஆ.ப., அவர்கள், அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். உடன்

# இன்றைய ராசி பலன்கள் (07.08.2026)

**மேஷம்:** குடும்பத்தில் இருந்த மனக்கசப்புகள் விலகி அமைதி உண்டாகும். கணவன்மனைவி இடையே புரிதல் அதிகரிக்கும். புதிய சுபகாரிய முயற்சிகள் சிறு தடைகளுக்குப் பின் கைகூடும்.

**ரிஷபம்:** எடுக்கும் முயற்சிகளில் சிறு தாமதங்கள் ஏற்பட்டாலும் விடாமுயற்சியால் நினைத்த காரியத்தை முடிப்பீர்கள். நிதானமான அணுகுமுறை வெற்றி தரும்.

**மிதுனம்:** பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. பிறர் விஷயங்களில் தேவையில்லாமல் தலையிடுவதைத் தவிர்ப்பது நன்மை பயக்கும்

**கடகம்:** குடும்பத்தில் கணவன்மனைவி இடையே ஒற்றுமை கூடும். பணவரவு திருப்திகரமாக இருக்கும்; ஆனால் பிறருக்கு முன்ஜாமீன் தருவதையோ வாக்குறுதி அளிப்பதையோ தவிர்க்கவும்.

**சிம்மம்:** உற்சாகமும்சுறுசுறுப்பும்அதிகரிக்கும் நாள்.தடைபட்டகாரியங்கள்சிறப்பாக முடிவடையும். பூர்வீகச் சொத்து வழியில் அனுகூலமான தகவல்கள் வரும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்த்து, அன்றாட வேலைகளில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்க்கவும்

**துலாம்:** பயணங்களின் போது எச்சரிக்கையுடன் இருக்கவும். பொறுமையாகவும் நிதானமாகவும் செயல்படுவது சாதகமான சூழலை உருவாக்கும்.

**விருச்சிகம்:** உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவும் பாராட்டும் கிடைக்கும். குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்

**தனுசு:** பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும். சுபகாரியப் பேச்சுகளைச் சிறிது காலம் தள்ளி வைப்பது நல்லது. வீண் செலவுகளைக் கட்டுப்படுத்தவும்.

**மகரம்:** கமிஷன் மற்றும் கான்ட்ராக்ட் தொழிலில் உள்ளவர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். பெரிய தொகையை முதலீடு செய்வதை அல்லது கடன் கொடுப்பதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** உழைப்பிற்கேற்ற சிறப்பான பலன்கள் கிடைக்கும். தொழிலில் புதிய வாய்ப்புகளும் வெளியூர் ஆர்டர்களும் வந்து சேரும்.

**மீனம்:** தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படும். நிலுவையில் இருந்த வங்கிக் கடன்களை அடைத்து நிம்மதி பெறுவீர்கள்.



தேனி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 முதற்கட்ட வீட்டுப்பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு பணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

# 'தர்மன்' படத்தை சுந்தர்.சி ஏன் இயக்கவில்லை?... மௌனம் கலைத்த குஷ்பூ



'தலைவர் 173' படத்திலிருந்து சுந்தர்.சி விலகியது தொடர்பான நடிகை குஷ்பூ நேர்காணல் ஒன்றில் பேசியுள்ளார்.

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் தற்போது தனது 173வது திரைப்படமான 'தர்மன்' படத்தில் நடித்து வருகிறார். தற்காலிகமாக 'தலைவர் 173' என்று அழைக்கப்பட்ட இப்படத்தை, ஓ மை கடவுளே, டிராகன் ஆகிய படங்களின் இயக்குநர் அஸ்வத் மாரிமுத்து இயக்கி வருகிறார். கமல்ஹாசனின் ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் நிறுவனம் தயாரிக்கும் இந்த திரைப்படம் ஆக்சன் கதைக்களத்தில் உருவாகி வருகிறது. இதில் ரஜினிகாந்த் மருத்துவர் கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார். படப்பிடிப்பு தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

'தர்மன்' படத்தை ஆரம்பத்தில் இயக்குநர் சுந்தர்.சி இயக்குவதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. ஆனால், சில காரணங்களால் அவர் அந்தப் படத்திலிருந்து விலகியதாக கூறப்பட்டது. அதன்பிறகே இயக்குநர் அஸ்வத் மாரிமுத்து இப்படத்தை இயக்க ஒப்பந்தமானார்.

இந்த நிலையில், சமீபத்திய நேர்காணல் ஒன்றில் நடிகையும், சுந்தர்.சியின் மனைவியுமான குஷ்பூ இதுகுறித்து விளக்கம் அளித்துள்ளார். அவர் கூறுகையில், "ஏதோ ஒரு காரணத்தால் சுந்தர்.சி 'தலைவர் 173' படத்திலிருந்து விலகினார். அதற்கு மேல் நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை" என்று தெரிவித்தார்.

மேலும் பேசிய குஷ்பூ, "ஒரு இயக்குநருக்கு எந்தப் படத்தை இயக்க வேண்டும், எந்தப் படத்தை இயக்கக் கூடாது என்பதை முடிவு செய்யும் முழு உரிமை இருக்கிறது. சுந்தர்.சி இந்தப் படத்தை இயக்கப் போவதில்லை என்ற தகவலை கமல்ஹாசன் சாருக்கு தொலைபேசி மூலம் நான்தான் தெரிவித்தேன்" என்று கூறியுள்ளார். அவரது இந்தப் பேச்சு தற்போது திரையுலகில் புதிய விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

# துருவ் விக்ரமின் படத்தில் இணைந்த சந்தோஷ் நாராயணன்... அதிகரிக்கும் எதிர்பார்ப்பு




அறிமுக இயக்குநர் கரண் அரவிந்த் குமார் இயக்கத்தில் துருவ் விக்ரம் நடிக்கும் டிவி 4 படத்தில் இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் இணைந்துள்ளார். தமிழ் சினிமாவின் முன்னணி நடிகர் சியான் விக்ரமின் மகனான துருவ் விக்ரம், வளர்ந்து வரும் இளம் நடிகர்களில் ஒருவராக வலம் வருகிறார். 'ஆதித்ய வர்மா' திரைப்படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமான அவர், பின்னர் தனது தந்தை விக்ரமுடன் இணைந்து 'மகான்' திரைப்படத்தில் நடித்தார்.சமீபத்தில் இயக்குநர் மாரி செல்வராஜ் இயக்கத்தில் வெளியான 'பைசன்' திரைப்படத்தில் துருவ் விக்ரம் கதாநாயகனாக நடித்திருந்தார். கபடி வீரரின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு உருவான இந்த படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றதுடன், உலகளவில் ரூ.70 கோடிக்கும் மேல் வசூலித்து சாதனையும் படைத்தது. குறிப்பாக, துருவ் விக்ரமின் நடிப்பு ரசிகர்களிடமும், விமர்சகர்களிடமும் பாராட்டைப் பெற்றது.

தற்போது துருவ் விக்ரம் தனது 4வது திரைப்படமான 'DV4'ல் நடித்து வருகிறார். மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இந்த படத்தை அறிமுக இயக்குநர் கரண் அரவிந்த் குமார் இயக்குகிறார். இந்த படத்தில் நடிகர்கள் பிருத்வி பாண்டியராஜ், சாய் தீனா உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். துருவ் விக்ரமும், மைத்ரி மூவி மேக்கர்ஸும் முதல் முறையாக இணைவதால், இந்த படம் மீது ரசிகர்கள் மத்தியில் அதிக எதிர்பார்ப்பு நிலவுகிறது.

இந்த நிலையில், 'DV4' திரைப்படத்தில் பிரபல இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன் இணைந்திருப்பது அதிகாரப்பூர்வமாக உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக இயக்குநர் கரண் ஏ. குமார், சந்தோஷ் நாராயணனுடன் எடுத்துக் கொண்ட புகைப்படத்தை தனது சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்து இந்த தகவலை அறிவித்துள்ளார். இயக்குநர் பகிர்ந்துள்ள இந்த புகைப்படம் தற்போது சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது. சந்தோஷ் நாராயணனின் இசை இந்த படத்திற்கு கூடுதல் பலமாக இருக்கும் என்ற நம்பிக்கையில் ரசிகர்கள் உள்ளனர்.

# டி20 கிரிக்கெட் வரலாற்றில் பொல்லார்டு சாதனையை முறியடித்த ஜோஸ் பட்லர்




டி20 கிரிக்கெட் வரலாற்றில் வெஸ்ட் இண்டீஸ் வீரர் கீரன் பொல்லார்டு சாதனையை ஜோஸ் பட்லர் முறியடித்து உள்ளார்.

இங்கிலாந்து பேட்ஸ்மேனான ஜோஸ் பட்லர், வெஸ்ட் இண்டீஸ்அணியின்கிரிக்கெட்வீரர்கீரன்பொல்லார்டின் சாதனையை முறியடித்து உள்ளார். வெல்ஷ் பயர் அணிக்கு எதிரான ஆட்டத்தின்போது, மான்செஸ்டர் சூப்பர் ஜெயண்ட்ஸ் அணிக்காக விளையாடிய பட்லர், 20 பந்துகளில் 2 பவுண்டரிகள் மற்றும் 6 சிக்சர்களுடன் 51 ரன்கள் எடுத்திருந்தபோது, டி20 வரலாற்றில் அதிக ரன் குவித்த வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

அவர் மொத்தம் 522 டி20 போட்டிகளில் விளையாடி, 9 சதங்கள் மற்றும் 105 அரைசதங்களுடன் 14,833 ரன்களை எடுத்துள்ளார். இதனால், பொல்லார்டின் (746 போட்டிகளில் இரண்டு சதங்களுடன் 14,803 ரன்கள்) சாதனை முறியடிக்கப்பட்டு உள்ளது.

நீண்டகால சாதனையாளரான வெஸ்ட் இண்டீஸ் அணியின் கிறிஸ் கெய்ல் (14,562 ரன்கள் மற்றும் 463 22 சதங்களுடன் 88 அரை சதங்களுடன்) 3ம் இடத்திற்கு தள்ளப்பட்டு உள்ளார்.

# சின்சினாட்டி ஓபன் டென்னிஸ்: கார்லஸ் அல்காரஸ் விலகல்



சின்சினாட்டி ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி அமெரிக்காவில் வருகிற 13ந் தேதி முதல் 23ந் தேதி வரை நடக்கிறது. இந்த போட்டியில்இருந்து உலகதரவரிசையில் 2வது இடத்தில் இருப்பவரும், நடப்பு சாம்பியனும், 7 கிராண்ட்ஸ் லாம் பட்டம் வென்றவருமான ஸ்பெயின் வீரர் கார்லஸ் அல்காரஸ் நேற்று விலகினார்.

முழங்கை காயம் காரணமாக கடந்த ஏப்ரல் மாதத்திற்கு பிறகு எந்தவொரு போட்டியிலும் ஆடாத அல்காரஸ் சின்சினாட்டி ஓபன் மூலம் களம் திரும்ப திட்டமிட்டு இருந்தார். ஆனால் அவர் காயத்தில் இருக்கும் இன்னும் முழுமையாக மீளாததால் ஒதுங்கும் முடிவை எடுத்துள்ளார். ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாம் போட்டியான அமெரிக்க ஓபன் டென்னிஸ் நியூயார்க்கில் வருகிற 30ந் தேதி தொடங்குகிறது. இந்த போட்டியில் நடப்பு சாம்பியனான அல்காரஸ் ஆடுவார் என்று தெரிகிறது.

# காமன்வெல்த் போட்டியில் அதிக பதக்கம் வென்ற தென்ஆப்பிரிக்க வீரர் வீடு தீயில் எரிந்து நாசம்




தென்ஆப்பிரிக்காவை சேர்ந்த பிரபல நீச்சல் வீரரான சாட்லெ கிளோஸ் ஒலிம்பிக்கில் ஒரு தங்கம் உள்பட 4 பதக்கமும், உலக சாம்பியன்ஷிப் போட்டியில் 17 தங்கப்பதக்கமும் வென்று இருக்கிறார். காமன்வெல்த் விளையாட்டு போட்டியில் 5 முறை பங்கேற்று இருக்கும் அவர் 7 தங்கம், 5 வெள்ளி, 9 வெண்கலம்என21பதக்கங்கள்குவித்துள்ளார்.ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் சமீபத்தில் நடந்த 23வது காமன்வெல்த் விளையாட்டு போட்டியில் 34 வயதான சாட் லெ கிளோஸ் 100மீட்டர்பிரீஸ்டைல்மற்றும்100மீட்டர்மெட்லேரிலேவில் வெண்கலப்பதக்கம் வென்றதன் மூலம் காமன்வெல்த் விளையாட்டு வரலாற்றில் அதிக பதக்கம் வென்ற வீரர் என்ற சாதனையை படைத்தார். இந்த நிலையில் காமன்வெல்த் விளையாட்டில் அவர் 21வது பதக்கம் வென்று சாதித்த நாளில் (ஜூலை 30) தென்ஆப்பிரிக்காவின் கேப்டவுனில் உள்ள அவரது வீடு தீக்கிரையானது தெரியவந்துள்ளது. அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்து அவரது வீட்டுக்கும் பரவியதுடன், வீட்டில் இருந்த அனைத்து பொருட்களும் முற்றிலும் எரிந்து நாசமாகி விட்டது என்று அவர் தனது இன்ஸ்டாகிராமில் பதிவிட்டுள்ளார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.